தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 2

2011 ஆகஸ்ட் 19, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு"

நீதி நெறிமுறைப்படி நல்லாட்சி நடத்தும் அரசருடைய நாட்டில் பருவ மழையும் குறையாத விளைச்சலும் ஒரு சேர நிறைந்திருக்கும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

42—

ஏற்றுமதி மண்டலம்

***1072—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முந்திரி விலையை நிர்ணயம் செய்யவும் அதற்கென ஏற்றுமதி மண்டலம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

முந்திரிக்கென ஏற்றுமதி மண்டலம் தமிழகத்தில் கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டியில் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

மின் இணைப்புகள்

***1403—திரு. ஜே.சி.டி. பிரபாகர்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம், சிட்கோ நகர் மின் இணைப்புகள் பூமிக்கடியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெரம்பூர் கோட்டம், சிட்கோ நகர் பிரிவில் சில பகுதிகளில் தாழ் மின்னழுத்தக் கம்பிகளைப் புதைவடமாக மாற்றுவதற்கு உரிய திட்டம் திருத்தியமைக்கப்பட்ட, விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின்கீழ்–Restructured Accelerated Power Development and Reforms Programme *தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. உரிய தளவாடங்கள் கிடைக்கப்பெற்றவுடன் மேற்கூறிய வேலைகள் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*